மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு ஜூன் திங்கள் 06ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.ம.எண்.08/2023
உள்
அசல் வழக்கு எண்.12/2017

-------------

ஷாஜஉறான் ... மனுதாரர்/வாதி

(மேற்படியாரின் அங்கீகாரம் பெற்ற
முகவர் காதர் பாஷா மூலம்)

/எதிர்/

1) ருக்மணி (இறப்பு)
2) கிருபாகரன்
3) சித்ரலேகா
4) சந்திரிகா
5) சாந்தினி
6) கார்த்திகேயினி
7) சிவக்குமார்
8) உஷாதேவி
9) சரவணநாதன்
10) எம்.வேலுச்சாமி
11) சார்பதிவாளர், சாத்தூர்
12) மாவட்ட பதிவாளர், விருதுநகர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 21.03.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 28.04.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ஏ.விஸ்வநாத் அவர்கள் ஆஜராகியும், 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், 1ம் பிரதிவாதி ருக்மணியின் இறப்பு குறித்து தாவா அசல் வழக்கின் பிராதினை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி 13.03.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

தாவா அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணைகள் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியாக 2ம் பிரதிவாதி முதல்விசாரணை தாக்கல் செய்துள்ளார். மேற்படி பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியை குறுக்குவிசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில் கடந்த 06.03.2023ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் ருக்மணி கடந்த 13.04.2019ம் தேதியில் இறந்ததாக, மேற்படி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மெமோ மூலம் தெரிவித்ததன் பேரில் 1ம் பிரதிவாதியின் இறப்பு பற்றி மனுதாரருக்கு 06.03.2023ம் தேதி தெரிய வந்துள்ளது. மேற்படி 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் அனைவரும் தாவா வழக்கின் தரப்பினர்களாக இருந்து வருகிறபடியால், மேற்படி 1ம் பிரதிவாதியின் இறப்பு பற்றி மட்டும் தெரிவித்து தாவா வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரர் தரப்பிற்கு ஏராளமான கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, தாவா அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி கடந்த 13.04.2019ம் தேதி இறந்துவிட்டார் என்பது உண்மையாகும்.

மேலும் 1ம் எதிர்மனதாரர்/பிரதிவாதியின் வாரிசுகள் ஏற்கனவே அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க்பபட்டுள்ளதால் மனுதாரர்/வாதி தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறப்பு என திருத்தம் செய்ய எவ்வித ஆட்சேபணையுமில்லை. எனவே, மனுதாரர்/வாதி மனுவை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>4). 11ம் எதிர்மனுதாரர்/11ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 12ம் எதிர்மனுதாரர்/12ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-</u>**

தாவா மனுவில் 1ம் பிரதிவாதி கடந்த 06.03.2023ம் தேதியில் இறந்துவிட்டார் என்று கூறிவிட்டு அவரது வாரிசுகளை வழக்கில் சேர்க்க தாவா மனு தாக்கல் செய்துள்ளார். தாவா மனுதாரர் அபேட்மெண்ட் மனுவை தாக்கல் செய்யவில்லை. அதனால் மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**<u>8). தீர்வு:-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. இந்த வழக்கானது வாதி தரப்பில் விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியை குறுக்குவிசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில் கடந்த

06.03.2023ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் ருக்மணி கடந்த 13.04.2019ம் தேதியில் இறந்ததாக, மேற்படி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மெமோ மூலம் தெரிவித்ததன் பேரில் 1ம் பிரதிவாதியின் இறப்பு பற்றி மனுதாரருக்கு 06.03.2023ம் தேதி தெரிய வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது ஏற்புடையதாக உள்ளது. இந்த மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை எவ்வாறு மாறும் என்பது குறித்தும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கவில்லை. எனவே, மனுதாரரால் 1ம் பிரதிவாதி ருக்மணியின் இறப்பு குறித்து தாவா அசல் வழக்கின் பிராதினை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி 13.03.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். வழக்கில் உள்ள தரப்பினர்களின் இறப்பை பதிவு செய்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, 1ம் பிரதிவாதி ருக்மணியின் இறப்பு குறித்து தாவா அசல் வழக்கின் பிராதினை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி 13.03.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜூன் திங்கள் 06ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.